# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு
************

## ஊடக அறிக்கை

### இந்தியாவில் எசல போயா தின கொண்டாட்டங்கள்

இந்திய கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு, மஹாபோதி சங்கம் – இந்தியா, கலாசார உறவுகளுக்கான இந்திய பேரவை ஆகியவற்றுடன் இணைந்து சர்வதேச பௌத்த கூட்டமைப்பு ஏற்பாடு செய்த வருடாந்த எசல போயா தினம் ( இந்தியாவில் ஆஷாத பூர்ணிமா என அழைக்கப்படும்) 2021 ஜூலை 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. புத்தபெருமானின் முதலாவது பிரசங்கத்தினை குறிக்கும் வகையில் இந்த தினம் அமைந்துள்ளது. இந்நிகழ்வை முன்னிட்டு இந்திய ஜனாதிபதி ராம் நாத் கோவிந்த் அவர்கள் வீடியோ மூலமான செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளதுடன் ஜனாதிபதியின் வாசஸ்தலமான ராஷ்டிரபதி பவனில் உள்ள பூங்காவில் அரச மரக் கன்று ஒன்றையும் நாட்டிவைத்தார்.

2. ஜனாதிபதி தனது செய்தியில், பௌத்த மதத்தை முறையாகப் பின்பற்றும் 550 மில்லியனுக்கும் அதிகமான மக்களைத்தாண்டி பௌத்தத்தின் சிறப்பம்சம் சென்றடைவதாகவும், மனிதகுலம் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சனைகளுக்கு பௌத்தமதத்தின் தர்க்கரீதியான, பகுத்தறிவுள்ள மற்றும் எளிமையான தீர்வுகள் காரணமாக புத்தபெருமானின் போதனைகளால் ஏனைய மதத்தவர்கள், ஐயுறவுவாதிகள் மற்றும் நாஸ்திகர்களும் ஈர்க்கப்படுகின்றனர் எனவும் குறிப்பிட்டார். புத்தபெருமானின் முக்கிய கொள்கைகளான, பிரபஞ்சம்சார் இரக்கம்; வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஒழுக்கம் மற்றும் பணிவு போன்ற எண்ணற்ற கொள்கைகள் சாரநாத்தில் அவரது முதல் பிரசங்கத்திலிருந்து கடந்த 2600 ஆண்டுகளில், மக்களை ஊக்கப்படுத்தியுள்ளன. மேலும், சத்தியத்தை உறுதியாக கடைபிடித்ததன் விளைவே புத்தரின் ஆன்மீக சக்திக்கு காரணமாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

3. கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கத்தால் முன்னொருபோதும் இல்லாத வகையில் இரக்கம், அன்பு மற்றும் சுயநலம் இல்லாத தன்மை தற்போது உலகிற்கு அதிகம் தேவைப்படுகிறது எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். அத்துடன் பௌத்தத்தில் கூறப்பட்டிருக்கும் பிரபஞ்சம் சார்ந்த மாண்புகளை ஏற்கவேண்டுமெனவும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

4. இப்புனித நாளை குறிக்கும் முகமாக நடைபெற்ற மற்றொரு நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் இதுபோன்ற நிலைப்பாட்டை பிரதிபலித்திருந்ததுடன் பல்வேறு நெருக்கடி நிலைகளில்

ஒற்றுமை மற்றும் அன்பு ஆகியவற்றின் சக்தியினை உலகம் உணர்ந்துகொண்டதாகவும் குறிப்பிட்டார். எமது மனம், பேச்சு, மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றுக்கும் எமது செயல் மற்றும் முயற்சி ஆகியவற்றுக்கும் இடையிலான ஒற்றுமையானது, வலிகளிலிருந்து எம்மை வேறாக்கி மகிழ்வை நோக்கி கொண்டுசெல்லும் என புத்தபெருமானை மேற்கோளிட்டு பிரதமர் குறிப்பிட்டிருந்தார்.

5. புராதன வரலாறுகளின்படி புத்த பெருமான் மூன்று வேறுபட்ட சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு வருகை தந்துள்ளார், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பல்லாயிரம் ஆண்டுகள் பழைமையான பௌத்த உறவானது அக்காலப்பகுதி முதல் பேணப்பட்டு வருகிறது. பின்னர் அசோக மன்னர் தனது மகன் மஹிந்த மற்றும் மகள் சங்கமித்த தேரர் ஆகியோரை இலங்கைக்கு அனுப்பினார். தற்போதைய நவீன காலத்தில் இந்த ஆழமான உறவானது மதரீதியான விழாக்கள், யாத்திரைகள் போன்றவற்றினால் குறிப்பிடப்படுகின்றன. 2020 செப்டெம்பரில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அவர்களுடனான மெய்நிகர் இருதரப்பு மாநாட்டின்போது இலங்கை இந்தியா இடையிலான பௌத்த உறவினை மேம்படுத்துவதற்காக பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியினை ஒதுக்கியிருந்தமை இந்த சந்தர்ப்பத்தில் நினைவில் கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

* * * * *

கொழும்பு
26 ஜூலை 2021